4. உரிமைப் பிரச்சினை.

30—3—1993 ஆம் நாளைய பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து தொலைக்காட்சி நிறுவனம் செய்தி ஒளிபரப்பியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து இன்னொரு பிரச்சினை. திரு. ராஜமன்னார் அவர்கள், நேற்றையதினம் பேரவையிலே நடந்த செய்திகளை, செய்தியாகத் தெரிவிக்கிற போது, இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து தங்களைத் தாக்கி விடுவார்களோ என்கிற அச்சத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற காங்கிரஸ் உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தார்கள் என்பதாக ஒரு செய்தியைத் தொலைக்காட்சி நிறுவனத்தினர் தொலைக்காட்சி மூலம் நேற்றைக்கு தெரிவித்ததாகத் தெரிவித்து, இது அவை உரிமை மீறல் பிரச்சினை, அவை உரிமை மீறல் பிரச்சினையாக இதை எடுத்துக்கொண்டு, அவையில் இதை விவாதிக்க வேண்டும் என்று எனக்கு ஒரு அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்கள் செய்தியில் சொல்லியிருப்பார்களேயானால் இந்தப் பேரவையின் கண்ணியத்தைக் குலைத்திட வேண்டும், பேரவையில் அச்ச உணர்வு ஏற்பட்டது என்பது போன்ற ஒரு செய்தியைத் திட்டமிட்டு, திசை திருப்பி நாட்டு மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்கிற முயற்சியில் மத்திய ஆட்சியின் அதிகாரத்திற்குள்ளே இருக்கிற தொலைக்காட்சி நிறுவனத்தினர் செய்கிறார்கள் என்றுதான் பொருளாகும். அது கண்டிக்கத் தக்கதாகும். எந்த அளவுக்கு எப்படிச் செய்தியைச் சொன்னார்கள் என்பதை அவர்களிடத்திலேயிருந்து கேட்டு, மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோதுகூட இது அவை உரிமை மீறல் பிரச்சினைதான் என்றாலும், தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கு இதைத் தெரிவித்து, அவர்களிடத்திலேயிருந்து விளக்கம் கேட்டு அதன் பின்னர் என்னுடைய முடிவைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, தொலைக்காட்சி நிறுவனத்தினர் இங்கே நடவடிக்கைக் குறிப்புகளில் இருக்கிற செய்தியைச் சொல்வார்களேயானால், இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகளை அப்படியே செய்தியாக வெளியிடுகிறார்கள் என்று பொருள். வேண்டுமென்றே திட்டமிட்டு இந்தப் பேரவைக்கே ஒரு களங்கம் கற்பிக்கிற வகையில், யாரையோ திருப்திப்படுத்துவதற்காக மட்டும் தொலைக்காட்சியினர் இப்படிப்பட்ட செய்திகளைத் தொடர்ந்து தங்களுடைய தொலைக்காட்சி மூலம் வெளிப்படுத்திக் கொண்டு இருப்பார்களேயானால் அது கண்டனத்துக்குரியது என்பதை மட்டும் இந்த நேரத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களிடத்திலேயிருந்து விளக்கம் வந்தவுடன் அந்தப் பிரச்சினையை எழுப்ப உங்களுக்கு அனுமதிக்கிறேன்.